SOFA-I-M

## முதலாம் இடைப்பருவத் தேர்வு

தமிழ்

மதிப்பெண்: 50

வகுப்பு - ஆறு - ________

நேரம்: 2மணி

| | |
|---|---|
| பள்ளியின் பெயர்: | மாணவன்/மாணவி பெயர்: |
| இடம்: | வரிசை எண்: |

**I. சரியான விடையை எழுதுக.** 10 × 1 = 10

1. ஏற்றத் தாழ்வற்ற ______________ அமைய வேண்டும்.
   அ) சமூகம் ஆ) நாடு இ) வீடு
2. தாய்மொழியில் படித்தால் ______________ அடையலாம்.
   அ) பன்மை ஆ) மேன்மை இ) பொறுமை
3. ‘தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்’ என்று பாடியவர் ____________
   அ) பாரதியார் ஆ) பாரதிதாசன் இ) கண்ணதாசன்
4. கதிரவனின் மற்றொரு பெயர் ______________
   அ) செவ்வாய் ஆ) சந்திரன் இ) ஞாயிறு
5. சித்தம் என்பதன் பொருள் ______________
   அ) மணம் ஆ) உள்ளம் இ) குணம்
6. அமுதென்று என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ______________
   அ) அமுது + ஒன்று ஆ) அமுது + என்று இ) அமு + தென்று
7. சீரிளமை என்ற சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ____________
   அ) சீர் + இளமை ஆ) சீரி + இளமை இ) சீர்மை + இளமை
8. கொங்கு + அலர் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ______________
   அ) கொங்குஅலர் ஆ) கொங்குலர் இ) கொங்கலர்
9. நிலா + ஒளி என்னும் சொல்லைச் சேர்க்க கிடைக்கும் சொல் ______________
   அ) நிலாவொளி ஆ) நிலாஒளி இ) நிலஒளி
10. தமிழ் + எங்கள் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ______________
   அ) தமிழ் எங்கள் ஆ) தமிழங்கள் இ) தமிழெங்கள்

**II. பொருத்துக.** 3 × 1 = 3

11. அ) முத்துச்சுடர் போல - மாடங்கள்
    ஆ) தூய நிறத்தில் - தென்றல்
    இ) சித்தம் மகிழ்ந்திட - நிலாஒளி

**III. சொற்றொடர் அமைக்க.** 2 × 1 = 2

12. அ) தனிச்சிறப்பு ஆ) நாள்தோறும்

**IV. மனப்பாடப் பாடல்.** 4 + 2 = 6

13. 'தமிழுக்கும்' எனத் தொடங்கும் இன்பத்தமிழ் பாடலை அடிபிறழாமல் எழுதுக.
14. 'தாய்' என முடியும் குறளை அடிமாறாமல் எழுதுக.

**V. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி.** 5 × 2 = 10

15. பாரதிதாசன் தமிழுக்குச் சூட்டியுள்ள பெயர்கள் யாவை?
16. செந்தமிழின் புகழ் எங்கெல்லாம் பரவ வேண்டும் என்று கவிஞர் கூறுகிறார்.
17. நீங்கள் அறிந்த தமிழ்க் காப்பியங்களின் பெயர்களைக் கூறுக.
18. மெய் எழுத்துகள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
19. இயற்கை போற்றத்தக்கது ஏன்?
20. காணி நிலம் பாடலில் பாரதியார் வேண்டுவன யாவை?
21. அன்பிலார், அன்புடையார் செயல்கள் யாவை?

**VI. எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி.** 3 × 3 = 9

22. விளைவுக்கும், நீருக்கும் உள்ள தொடர்பு யாது?
23. கால வெள்ளத்தை எதிர்த்து நிற்கும் மொழி தமிழ் என்று கவிஞர் கூறுவதன் காரணம் என்ன?
24. தமிழ் மொழியின் சிறப்புக் குறித்து ஐந்து வரிகளில் எழுதுக.
25. எழுத்துகளுக்குத் தொடக்கமாக அமைவது எது?
26. அஃறிணை, பாகற்காய் என்னும் சொற்களின் பொருள் சிறப்பு யாது?

**VII. வினாக்களுக்கு விடையளி.** 5 × 2 = 10

27. சொல் பொருள் தருக.

    அ) அசதி ஆ) மேதினி இ) அளி ஈ) சுடர்

28. தமிழ் எண்களை எழுதுக.

| அரபு எண் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தமிழ் எண் | | | | | | | | | | |

29. கலைச்சொல் தருக.

    அ) Internet ஆ) Touch Screen

30. ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச்சொல்லை எழுதுக.

    அ) டிக்கெட் இல்லாமல் பஸ்சில் பயணம் செய்யக் கூடாது.

    ஆ) ஸ்கூலில் பஸ்ட் மாணவனாக விளங்கு.

31. நயம் அறிக.

    "செயற்கரிய செய்வார் பெரியவர் சிறியர்

    செயற்கரிய செய்கலா தார்"

    இக்குறளில் உள்ள எதுகை, மோனைச் சொற்களை எடுத்து எழுதுக.